திரு. ஆர்.கே. பாரதி மோகன்: முடித்துவிடுகிறேன் சார். காலங்கள் மாறும், காட்சிகள் மாறும், ஆட்சியும் மாறும். மீண்டும் தமிழகத்தின் முதல்வராக மாண்புமிகு அம்மா அவர்கள் வருவார்கள் என்று கூறி, எனது உரையை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று எடுத்துக்கொள்ளப்பட்ட மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கு மாண்புமிகு அமைச்சர்கள் நாளை பதிலுரை வழங்குவார்கள்.

5. அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி

(ஆ) விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை *(13-5-2010)* வினாக்கள்-விடைகள் நேரம் ஒத்தி வைப்பது குறித்து தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டப் பேரவை விதி 32-ஐ நாளை *(13-5-2010)* வியாழக்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை *(13-5-2010)* வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(13-5-2010)* வியாழக்கிழமை காலை *9-30* மணிக்குக் கூடும். வணக்கம்.